

பிள்ளையார் ஸ்ரோர், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை
பிறப்பிடமாகவும், ஒஸ்மானியா கல்லூரி வீதி, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

# சிவதாஸன் லோகேஸ்வரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**20.10.2017**

உ

சிவமயம்



பிள்ளையார் ஸ்ரோர், மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும்
ஒஸ்மானியா கல்லூரிவீதி ஓட்டுமடம்
யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்:-

**சிவதாசன் லோகேஸ்வரி** அவர்களின்
**மறைவால் மனமுருகி மலர்ந்திடும்**

# நினைவு மலர்

# 20-11-2017

உ

# எம் அருமை உறவிற்கு சமர்ப்பணம்.

எங்கள் அனைவரதும் அன்புக்கும் பாசத்திற்குமுரிய
எங்கள் குடும்ப குல விளக்காய் ஒளிதந்து
அன்பு நிறைந்த பேரொளியாக
பண்பு நிறைந்த பாவையாக
ஆற்றல் மிகுந்த அன்னையாக
எந்நாளும் இனிய முகத்தினராக
எந்நேரமும் அன்புக்கரம் நீட்டியவராக
எங்கள் உள்ளங்களில் உறைந்து இருக்கும்
குடும்பத்தலைவியின்
பாதகமலங்களுக்கு
இவ்வினிய நினைவு மலரினை
காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் மாறா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

உ
சிவமயம்



மலர்வில்
07.12.1958

உதிர்வில்
21.10.2017

அமரர்

# சிவதாசன் லோகேஸ்வரி

அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டதாம் ஏவிளம்பி ஐப்பசி திங்கள்
பூண்ட வளர்பக்க துதியையில் - நீண்ட புகழ்
இராச மகளாகி சிவாமனையாளான பபா
பராபரன்தாள் சேர்ந்த நாள்

உ

# திருமுறைத் தோத்திரப்பாடல்கள்

## பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

விநாயகர்துதி

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரம் தாமரை நாயகன்
அகட சக்கர வின் மணியாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

தேவாரம் (சம்பந்தர்)

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலர்
நாதாவெனவும் நக்கா எனவும் நம்பா வென நின்று
பாதந்தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே

திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே

உ

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் திக்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர்தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின் 02
கொண்டும் கொடுத்தும்
குடிகுடி யீசற்காள் செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

உ

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

## காயத்ரி மந்திரம்

ஓம் பூர் புவஸ்வர
தத் ஸவிதுர் வருரண்யம்
பர்கோ தேவஸ்ய திமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்

கருத்து:- ஓ மாதா முக்காலமும் மூவுலகும் முக்குணம் ஆகியவற்றில் உறைபவனே எனது புத்தியைக் கூர்மையடையச் செய்து சூர்யப் ப்ரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல் எனது சகல அறியாமையையும் அகற்றி எனது புத்தியைச் சார்ந்த சித்தி நிர்மலமானதாகப் பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கின்றேன்

உ



# கந்தஷஷ்டி கவசம்

## காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -
கதித்து ஓங்கும் நிஷ்டையுங் கைகூடும்
நிமலர் அருள் கந்தர் சஷ்டிக் கவசம் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

## நிலைமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

உ

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

ரவண பவச ர ர ர ர ர ர ர
ரிவண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிருதிண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

உ

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோ தனென்று

உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க

உ

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரடண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றைக் விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க

கணைக்கால் முழந்தாழ் கதிர்வேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க

முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

உ

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பீதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் - மண்ணையும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்ல இடி விழுந் தோடிட

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை ளுடனே பலகல சத்துடன்

உ

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர்களெனக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலரி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணவது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்

ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

உ

குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

உ

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
எந்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரசவ மாக

ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக

அன்புடன் இரட்சிஅ ன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்

வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

உ

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி

நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு

ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தாங்கு அருளுவர்
மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவை துணித்தகை யானால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!

தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!

கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளா போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம.



உ

# அமரர் சிவதாசன் லோகேஸ்வரி அவர்களது மண்ணுலக நடங்கள்

வேலணை ஊரில் புகழ்பூத்த பெருமை மிகுகுலத்தில் அவதரித்தவரும், வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத்தலைவராக வீற்றிருந்தவரும், பிள்ளையார் ஸ்ரோர் உரிமையாளராகவும் தொழில் அதிபராக இருந்தவரும் வேலணைப்பிள்ளையார் கோவில் இராஜகோபுரம் வானளாவும் உயரத்தில் எழுச்சி பெற்ற அடித்தளம் அமைத்தவருமான அமரர்களான க.இராசதுரை சிவயோகம் (கிளி) தம்பதிகளின் இல்லறப் பயனாக இரண்டாவது உத்தம புத்திரியாக பிறந்தவளே அமரர் சிவதாசன் லோகேஸ்வரி என்பவர் ஆவார்.

இவரது பிறந்த நாள் 1958 ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் ஏழாம் நாள் ஆகும். இரஞ்சிதமலர், இரத்தினேஸ்வரன், செந்தமிழ்ச்செல்வி, சாந்தநாயகி, வதனி என்போர்கள் அவர் தம் உடன் பிறப்புக்களான சகோதரர்கள் ஆவார்கள். சகோதர பாசத்துடன் கூடிக்குலாவி வாழ்ந்து வந்தார்.

பள்ளிப்பருவம் வந்த வேளை லேகேஸ்வரி ஆரம்பக்கல்வியை யாழ் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை முறையே மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும், யாழ் வேம்படி கல்லூரியிலும் கற்றுச் சிறப்பு சித்தி அடைந்தார். பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து வீட்டுப்பணியில் ஈடுபாடு காட்டினார்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தென்மராட்சியின் கண் வானுயர்ந்து பனை, தென்னை, அழகு செய்த மா, பலா, வாழை என்னும் முக்கனிச்சோலைகள் சூழ்பதியாம் உசன் பதியில் சந்திரசேகர மாப்பாண முதலியாரது உடையார் மரபின்

வழித்தோன்றல் அமரர் குகதாசன் சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட உத்தம புதல்வனான சிவதாசன் என்பவரை லோகேஸ்வரி என்பவருக்கு மணமகனாகத் தேர்ந்தெடுத்து பெரியோர்கள் நிச்சயப்படுத்திய முறைக்கு இணங்க உரிய முறைப்படி 02.09. 1985ல் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

இல்லற வாழ்வில் நுழைந்த லோகேஸ்வரி அன்பு மாமியாரது அரவணைப்பைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்தார். வீட்டுப் பொறுப்புக்களை ஏற்று குடும்ப பொக்கிஷமாக குலவிளக்காக விளங்கினார். இக்காலம் அவரது வசந்தகாலமாகவே சென்று கொண்டிருந்தது.

"மங்கலம் என்பது மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப "நிலக்ஷன்" என்பவரை 24.05.1991 மகனாகப் பெற்று எடுத்து பாலூட்டி தாலாட்டி அன்பாக வளர்த்து வந்தார்.

நாளடைவில் நாடு சமூகமான நிலைக்கு திரும்ப மகனது கல்வி, தங்களது உடல் ஆரோக்கியம் என்பவற்றை கருத்திற் கொண்டு தங்களுக்கு உரித்தான யாழ்ப்பாணத்தில் ஓட்டுமடம், ஒஸ்மானியா கல்லூரி வீதியில் அமைந்துள்ள மாளிகை என விளங்கும் வீட்டில் நிரந்தர வதிவிடமாகக் கொண்டு இனிதே வாழ்ந்து வந்தார்.

எனினும் இவரது வாழ்வியலில் அடுத்து அடுத்து ஏற்பட்ட இழப்புக்கள் சோதனையையம் வேதனையையும் தந்துள்ளன. 27.01.1986ல் தந்தை இராசதுரை, 12.03.1988ல் மாமா குகதாசன் 12.04.1988ல் தாய் சிவயோகம், 05.06.1997ல் மாமி சிவபாக்கியம், 17.06.2013ல் மைத்தனர் G.K. ஈசன், 27.12.2013ல் சகோதரி சாந்தநாயகி ஆகியோர் அமரத்துவம் அடைந்தமை அவ்வப்போது சோகத்தை தந்தது.

உ


மைத்துனர்கள், உடன்பிறந்த சகோதர சகோதரிகள், என்பவர்களது இன்ப வாழ்வதனைக்கண்டு தன்னகத்தே பெருமை கொண்டு இருந்தார். பதினெட்டு கணக்கான பேறாமக்கள் மருமக்களான எதிர் கால சந்ததியினர் ஒளி மயமாக விளங்க எல்லாம் வல்ல இறைவனிடம் விண்ணப்பம் செய்தார். இத்தகு பெரும் வம்சாவழி விருட்சத்தில் ஒரு தனிப்பெரும் மரமாக வாழ்ந்து வந்தவர் தான் சிவதாசன் லோகேஸ்வரி இவரது கணவன்21.10.2017 சனிக்கிழமை அன்று பகல் வேளை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி இருந்தது. அப்போது மனைவியார் அதற்கான ஆயத்தங்களை செய்து கொடுத்தார். கணவன் மோட்டார் சைக்கிளில் புறப்படும் போது வீதி வரை சென்று, வீட்டு நுழைவாயிலில் நின்று வழி அனுப்பி வைத்தார். ஆஸ்ப்பத்திரி அலுவல் முடிந்து வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த கணவன் எதிர்பாராத விதமாக விபத்திற்கு உள்ளாகி காயம் அடைந்தார். பின்னர் யாழ் போதன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் வீட்டிற்கு தகவல் அனுப்பிய போதும் வீட்டில் இருந்த காவல் நாய் வந்தவரை கலைத்து விட்டது.

மறுநாள் (ஞாயிறு) காலை 08.30 மணி அளவில் கணவரது மைத்துனன் ஒருவர் தற்றுணிவுடன் வீட்டிலிருந்த நாயை விரட்டியவாறு வீட்டினுள் நுழைந்து பார்த்த போது மனைவியார் சமையல் அறையில் வீழ்ந்து கிடப்பதையும், இரவு கணவருக்கு ஆக்கப்பட்ட உணவு பரிமாறும் தட்டில் இருப்பதையும் கண்டு திகைப்பு அடைந்தார்.அவர் கிட்டச் சென்று தொட்டுப் பார்த்த போது சுவாசம் இல்லாது உடல் இயக்கம் எதுவும் இல்லாது இருப்பதை அறிந்து இறந்துள்ளாரென உணர்ந்து கொண்டார். இத்தகவலை கணவனது சகோதரனுக்கும் மற்றும் உறவினருக்கும் அனுப்பினார். மேலும் ஆகவேண்டிய சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஞாயிறு மாலை வேளை சடலமாக ஆஸ்பதியிலிருந்து வீட்டிற்கு கொண்டு வந்துசேர்த்தனர். சிகிச்சை பெற்று இருந்த கணவனும் ஆஸ்பத்திரி அனுமதி பெற்று வீடு சேர்ந்து மனைவியரது பூத உடலுக்கு

மலர் அஞ்சலி செய்து பிரியாத்துயரில் மூழ்கினார். தனது அன்பு மகனை அரவணைத்து அழுதார். தகவல் அறிந்து அயலவர், சுற்றத்தினர், வருகை தந்தனர். இவரது சகோதரிகள் இருவர் இலண்டன் கனடா ஆகிய நாடுகளிலிருந்து வருவதை எதிர் பார்க்கப்பட்டது. , இவர்கள் வருகையின் பின்னர் 25. 11.2017 புதன்கிழமை வீட்டில் மரணச் சடங்கிற்கான கிரியைகள் ஆற்றப்பட்டு பூதவுடல் கோம்மயன் மணல் இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு. அக்கினியில் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திப்போமாக.

# ஓம் சாந்தி சாந்தி சாந்தி



உ

# ஆருயிர் கணவரது ஆற்றொணா அலறல்

வழி அனுப்பி வைப்பீர் கடமைதனை ஆற்ற
வழிமேல் விழி வைத்து பார்த்து இருப்பீர் - தனிவழி
போகுவதற்கு துணிந்து விட்டீர் எதுவும்
ஆவதெல்லாம் ஆகட்டும் என்று - பபா
சோராது இருப்பீர் சோகமது எது வந்தாலும்
பாராது என் வரவையே பார்த்து இருப்பீர் - தீராது
என்வினை என்று வாழ்வதனை தீர்த்து விட்டீரே
உன் பாலனுக்கும் எனக்கும் என்ன தீர்வு - சென்மம்
பல வந்து போனாலும் போகட்டும் - பலாபலன்
பலவந்து போனாலும் போகட்டும் - பலரும் கூடி
எனக்கு ஏது ஆறுதல் கூறினாலும் எதுவானாலும்
உமக்கு நான் செய்ய வேண்டியதை கூறிவிடு - மனதுக்கு
ஆறுதல் தருவாயா! வாசல் கதவு மூடியதென
ஊறுபாடு எதுமின்றி உன் மனக் கதவு மூடியதோ
தேறுதலின்றி

விழி பிதுங்கி அழுகின்றேன் புன்சிரிப்போடு உன்
விழியின் பார்வை எப்பிறப்பில் பார்ப்பேன் - வழி
அனுப்புதவும் வீடு திரும்பும் போது விருப்புடன்
தினசரி அனுசரிப்பதும் வழமை தானே ஆன பொழுதில்
வைத்தியசாலை வெளிசெல்லும் அத்தினத்தில்
மெத்த பணிவன்புடன் கனத்த யோசனையுடன் - அத்தானுடன்
வீதி வரை வந்து நுழைவாயில் தனில் நின்று
போதீர் என வழி அனுப்பினீர் - போதும்
என்ற மனமே பொன் செய்யம் என்றது போல
அன்று எனக்கு நீர் அளித்த பிரியா விடையோ என - இன்று
பிரியாத்துயர்க் கடலில் மூழ்கி தத்தளிக்கின்றேன்
கரை சேரும் கலங்கரை விளக்கு ஆகுவீரோ...

உ

# அன்பு மகனது அழுகுரல்

அம்மா என்ற அறுசுவை உணவு போனால்
இம் மாநிலத்தில் இன்பம் ஏதுவரும் - சும்மா
இருந்து என்ன இனி ஏது செய்வேன் உன்
கருவறையில் இருந்து வகுப்பறை வரை வரும்
என் இன்பதுன்பங்கள் எத்தனையோ அத்தனையும்
உன் இதயம் மீது சுமந்து திரிந்தீர் - இன்பம் தரும்
தித்திப்பான தின்பண்டங்கள்தமை தீற்றி தீற்றி
பத்திரமாக வளர்த்து எடுத்தீர் பரிதவிக்கின்றேன் - எத்திக்கு
சென்றீர் என் அப்பாவும் நானும் எங்கு செல்வோம்
நன்மகனாக வாழ்வேன் வந்து காண்பீரோ நற்றாயாக
வந்து எமக்கு ஒருகால் ஆறுதல் கூறிவிடு மனம்
நொந்து போன எங்களை ஒருகணம் தேற்றிவிடும் - இந்நிலை
ஏனோ வந்துவிட்டது விதிவசம் தானோ
மனமோ உடலோ உயிரோ உன்வசத் தான்

# இளைய சகோதரனது இரங்கல்

உன் உடன் பிறப்பாளானாம் உன் சோதரன்
இன்று உனை இழந்து இடரானேன் - சொன்மாலை
புனைந்து உனைப் போற்றி புவிதனில் உள்ளவரை
நினைந்து வாச மலரானேன்

# சோதரிகளது ஆற்றொணா சோகம்

நம்மவர்களில் ஒருத்தியாக பிறந்து வாழ்ந்தீர்
இம்மாநிலத்தில் இராது ஒழிந்தீர் - அம்மா
செந்தமிழ் செல்வி என செந்தேனும் பாலும் என
பந்த பாசத்தோடு வாழ்வோமா

# தேற்றம்

என் செயலாவது ஒன்றுமிலை இனித்தெய்வமே
சென்னியில் விதித்ததை யார் தடுக்கற் பாலர் - இன்னும்
யாம் ஒன்றும் அறியோம் பராபரமே
நாம் போம் வழியும் அதுவேயாம

உ


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

07
12
1958

மறைவு

21
10
2017



அமரர்

## சிவதாசன் லோகேஸ்வரி

சிரித்த முகத்துடன் உன்னைப் பார்த்தால்
எம் துன்பமெல்லாம் பறந்துவிடுமே
அன்பால் அரவணைக்கும் குணம் கொண்டவளே!
மனதில் வஞ்சம் வைத்து பழக மாட்டாயே!
காணவில்லை உன் சிரித்த வதனத்தை
தொலைத்துவிட்டோமே தங்கத்தை
இனி எங்கு தேடுவோம்.
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் :

பிள்ளையார் இன் பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
ஊழியர்கள்

Jana digital Printing Jaffna. Tp:-21-212 0698

உ

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
07
.
12
.
1958

இறப்பு
21
.
10
.
2017

அமரர்

## திருமதி லோகேஸ்வரி சிவதாசன்

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
மறைவை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவலிங்கம் மோட்டோர்ஸ்
குடும்பத்தினர்.

ES Printers - 021 492 7471

உ

# வம்சாவழி


சந்திரசேகர மாப்பாண முதலியாரது
உடையார் மரபின் வழித்தோன்றல்
*குகதாசன் + *சிவபாக்கியம்
கமலதாசன்
சிவதாசன்
*ஈசன்
விமலதாஸ்
*இராசதுரை + *சிவயோகம்
இரஞ்சிதமலர்
*லோகேஸ்வரி
இரத்தினேஸ்வரன்
செந்தமிழ்ச்செல்வி
*சாந்தநாயகி
வதனி
நிலக்ஷன்
அமரர்கள் *

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவியான அன்புத்தெய்வம் இரவு வேளை யாருமற்ற இடத்தில் திடீரென நோய் வந்து வீழ்த்திய போது ஓடிவந்து உதவிய மைத்துனர்கள், சகோதரர்கள், உறவினர்கள், அயலவர்கள் பாசத்திற்குரிய அன்புத்தெய்வம் பூவுலகப் பிரிவு செய்தி அறிந்து வீடு தேடிவந்த உற்றார், உறவினர்கள் நண்பர்கள் சக ஊழியர்கள் சமூக உறுப்பினர் கள் வெளிநாட்டு உறவுகள் ஆகிய அனைவர்களுக்கும் எம் துயர் துடைக்க நீண்ட கரங்களுக்கும் மனங்களுக்கும் மரணச் சடங்கில் பங்கு கொண்டோருக்கும், வெளி மாவட்டம், வெளி நாடுகளிலிருந்து தொலைபேசி, மின்னஞ்சல், இலத்திரனியல், ஊடகம், பத்திரிகைச் செய்திகள், கடிதங்கள் என்பவற்றின் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மலர் வளையங்கள் வாயிலாக அஞ்சலி செலுத்தி எமது சோகத்தை பகிர்ந்தோருக்கும் கிரியைகளைச் செய்த அந்தணப் பெருமக்களுக்கும் இறுதிக் கிரியைக்கு வேண்டிய உதவிகளை ஆற்றியவர்களுக்கும் இம்மலரை மலர்விக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

368 ஒஸ்மானியா கல்லூரி வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
20.11.2017.



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



பரன்நெற்கொம் கச்சாய் வீதி, கொடிகாமம்- 0773266944